26th August 1955]

Sri M. NARAYANA KURUP :—" Will the Government see that precautions are taken to avoid such incidents in future? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" It has nothing to do with the Government. A private individual is running some institution. Certainly we cannot be peeping into every compound and seeing whether necessary precautions have been taken."

Sri N. K. PALANISAMY :—" இம்மாதிரியெல்லாம் சம்பவங்கள் ஏற்படுவதினால் தேகப் பயிற்சி ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கு முன் சர்க்காருடைய லைசென்ஸ் பெற்றிருக்க வேண்டுமென்ற முறையைக் கையாளுவதை சர்க்கார் ஆலோசிப்பார்களா ? "

The Hon. Sri C. SUBRAMANIAM :—" தேகப் பயிற்சி ஸ்தாபனங்களை ஆரம்பிப்பதற்கு லைசென்ஸ் பெறவேண்டுமென்று சொன்னால் கனம் அங்கத்தினரே ஜீவாதார உரிமையைப்பற்றியெல்லாம் பேச ஆரம்பித்து விடுவார். அம்மாதிரி ஸ்தாபனங்களை தாங்களாகவே ஆரம்பித்து நடக்கக்கூடியவை. அந்த ஸ்தாபனத்தில் போய்ச் சேருகின்றவர்கள் சரியானபடி பயிற்சி பெறுகின்றார்களா என்று பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பு அவர்களுக்கு இருக்கிறது. இப்படிப்பட்ட சிறு ஸ்தாபனங்களுக்கெல்லாம் சர்க்கார் கட்டுப்பாடு வருமானால் ஸ்தாபனங்களே நடக்க முடியாமல் போகலாம்."

Loans under the Madras State Aid to Industries Act

* 2301 *Q.*—Sri N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the management of the Gowri Tile Works of Manamadurai approached the Government for any loan under the Madras State Aid to Industries Act;

(*b*) whether the loan was given; and

(*c*) if not, why?

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" (*a*) No, Sir.

"(*b*) & (*c*) Do not arise."

Sri N. K. PALANISAMY :—" மானாமதுரையிலுள்ள கௌரி ஓட்டுத் தொழிற்சாலையினர் தங்களுக்குக் கடன் வேண்டுமென்று சர்க்காரை சென்ற மூன்று வருஷ காலமாகக் கேட்டு, சர்க்கார் கொடுப்பதாகச் சொல்லியும் ஏன் இன்னும் கொடுக்காமல் மறுதளிக்கிறார்கள் என்று மந்திரி அவர்கள் பதில் சொல்ல முடியுமா ? "

The Hon. Sri M. BHAKTAVATSALAM :—" நான் முன்பு பதிலளித்ததுபோல் அந்த நிர்வாகத்தினர் கடன் எதுவும் கேட்டதாக என்னிடம் தகவல் கிடையாது."

* 2302 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) the amount of loan granted to the Rajeswari Mills, Limited, Gudiyatham, under the State Aid to Industries Act;

(*b*) when the loan was granted; and

(*c*) the amount so far recovered out of this loan?